தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
5.12.2023 (செவ்வாய்க்கிழமை)

# ஜிப்மரில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகள்

புதுச்சேரி, டிச.5-
புதுச்சேரி ஜிப்மர் புனர்வாழ்வு மருத்துவ துறை சார்பாக சர்வ தேச மாற்றுத்திறனாளிகள் தின விழா நடந்தது. இதன் ஒரு பகுதியாக ஜிப்மர் மாற்றுத்திறனாளி ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கான கிரிக்கெட் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடந்தது. இதன் தொடக்க நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் டாக்டர் விக்ரம் காட்டே, முதுநிலை அதிகாரி ஹவாசிங் ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளை தொடங்கி வைத்தனர். இதில் மாற்றுத்திறனாளி ஊழியர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழா நடந்தது. விழாவில் ஜிப்மர் இயக்குனர் டாக்டர் ராகேஷ் அகர்வால் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் துணை இயக்குனர் கிருஷ்ண கோபால் கோயல், டாக்டர் ஹாதர் பாஷா மற்றும் டாக்டர்கள், கலந்து கொண்டனர்.